# தந்தையைப் பெற்ற தனயன்



## கவிப்பேரரசு வைரமுத்து

எழுபது உன்னைத் தொடுமுன்னே
இமயத்தை நீ தொட்டுவிட்டாய்

நேற்றுப் பூத்த பூவை
இன்று பூத்தது மறைத்துவிடுவது மாதிரி
உன் வெள்ளிக்கிழமைச் சாதனையைச்
சனிக்கிழமை தாண்டுகிறது

பூட்டிக்கிடக்கும் வீடுகளிலும்
புகுந்துவிடும் கிரணக் கீற்றாய்
வேற்று மாநிலங்களிலும்
உன் புகழ் புகுந்துவிடுகிறது

மனிதர் அறியாமல்
மனிதரைப் பின்தொடரும்
மாலை நிழலைப்போல
உனக்குத் தெரியாமல்
உன்னைப் பின்பற்றுகிறது
தேசியம்

தாய்வீட்டுச் சீதனம்
தள்ளும்; தப்பும்; தவிர்க்கப்படும்

ஆனால்,
தமையன் வீட்டுச் சீதனமாம்
உரிமைத் தொகையோ
கடைசித் தேதி கிழிக்கும்
சத்தம் அடங்குமுன்னே
கணக்கில் விழுகிறது

எந்தக் கடவுளும்
பறவையின் கூட்டுக்குள்
இரை எறிவதில்லை
நீ எறிகிறாய்

வெல்லாத பகைவர்கள்
சொல்லாத பழி சொல்கிறார்கள்

இருக்கட்டும்
தித்திப்பைத் தாண்டி

நாவில் ஓடும்

செல்லக் கசப்புதான்

தேநீருக்கழகு

பள்ளிச் சிறார்களின்
சிற்றுண்டியில்
சிந்துகிற கவளங்களில்
தெய்வங்கள் பசியாறுகின்றன

ஆனாலும் சிலர் பழிக்கிறார்கள்
பாவம் அவர்கள்
மழையில் வானம் அழுகிவிட்டது
என்பவர்கள்

உன்னைக் குறை சொல்கிறவர்கள்
குயில் குரைக்கிறது என்பவர்கள்

கலைஞர் நினைவிடம்
கண்டு வலம்வந்தேன்
விரிந்த என் வியப்பின்முன்னே
வங்காள விரிகுடா
செம்பரம்பாக்கமாய்ச் சிறுத்துவிட்டது

இது
மகன் தந்தைக்கு எழுப்பிய
மண்டபம் அல்ல
தலைவனுக்குத்
தொண்டன் எழுப்பிய தாஜ்மஹால்

தந்தையைப் பெற்றெடுத்த
தனயன் நீ

கலைஞர் உன்னை
முன்னே வாழ்த்துகின்றார்
நான் பின்னே
அவர்
தோள்துண்டு உரசும்
தூரத்தில் !

# வாகை சூடும் மாமுதல்வர் வாழியரோ!வாழியரோ!!

## பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன்





எம்மின்வெல் தமிழ்நாடு
என்னதவம் செய்ததுவோ?
தம்மின்தம் மக்களின்மேல்
அறிவுடைமை எனச்சொற்ற
செம்மைத் திருவள்ளுவரின்
செப்பியநல் கருத்தாடல்
அம்மம்மா உண்மையேஎம்
அரும்முதல்வர் செயற்பாடே!

இருண்டிருந்த தமிழ்நாட்டில்
இருசுடர்கள் ஒளிபோலும்
மருண்டிருந்த தாய்மண்ணில்
மாணிக்கமலை ஒளிபோல்
வெருண்டிருந்த மக்களிடை
விடிவெள்ளி முளைத்ததுபோல்
தரும்மீட்சி தான்தந்த
தகைமாட்சி முதல்வரம்மா!

அடுக்கடுக்காய்ச் சாதனைகள்
அடலேற்றுத் துணிவுடைமை
இடுக்கண்கள் பொடிப்பொடியாய்
இருந்தஇடம் தெரியாமல்
கடும்உழைப்பில் இரவுபகல்
கண்விழித்தே நம்முதல்வர்
மிடுக்குடனே செயலாற்றும்
விந்தைசெய் முதல் வராட்சி!

நயவஞ்ச ஒன்றியத்தின்
நாட்டாண்மை கேடுகெட்ட
கயமைகளின் ஆட்டங்கள்
கவிழ்க்கநினை மோசடிகள்
குயவன்கை வனைந்தவண்ணக்
குடமுடைக்கும் தீயஎண்ணம்
நயத்தக்க முறைஆட்சி
நம்முதல்வர் வெல்வதென்னே!

**அஞ்சாத அரிமாப்போல்**
**அறம்தேர்ந்த துறவியைப்போல்**
**துஞ்சாதே முத்துவேலர்**
**கருணாநிதி மு.க.இஸ்டாலின்**
**விஞ்சிவிஞ்சி மக்களோடு**
**மக்களாக வீறுகொண்டே**
**நஞ்சனையார் புறந்தள்ளிதமிழ்**
**நாடுகாக்கும் நம்முதல்வர்**

**வியப்புக்கும் வியப்பான**
**விதிமைக்கும் மதிசமைக்கும்**
**உயர்வுக்குட் உயர்வான**
**உச்சத்தின் உச்சமாக**
**நயத்தக்க நாகரீக**
**நல்லாண்மைப் பேறுபெற்ற**
**செயலோங்கம் திட்டங்கள்**
**திசைவணங்கும் முதல்வராட்சி!**

**கோடிகோடித் தமிழர்கைகள்**
**கூட்டுவிக்கும் வலிமையடா!**
**பாடிவீட்டு மாத்தலைவர்**
**பசும்பொன்போல் சுடர்விட்டே**
**நாடிநாடி மக்கட்கே**
**நன்றுசெயம் முதன்மைஎம்**
**ஈடிணைஇல் லாமுதல்வர்**
**இவர்இணையாய் எவருண்டோ?**

எழுபத்தொன்றாம் அகவையிலே
எழுச்சிதரு நூற்றின்மேல்
விழுதுவிடும் ஆயுளேற்று
வினைத்திட்பக் கலைஞர்அப்பா
தொழுதுஆட்சி வாகைசூடி
தொல்தமிழ்போல் வாழியரோ
எழுதுகோல்பாச் செந்தமிழ்த்தாய்
எம்தமிழ்க்கோ! வாழிபோல்நீடூழி!

நிதித்திட்ட அறிக்கைக்கோ
நிகரில்லை எனும்வகையில்!
பதிதமிழ்நாட் டுயர்வுக்காய்
பதித்தஆக்கச் சிறப்பென்னே!
எதிர்காலத் தமிழ்நாட்டை
எம்முதன்மை முதல்வர்தான்
அதிஅதிமேல் மேம்பாட்டில்
ஆக்குவிக்கும் விழுமியமே!

தொழில்வேகம் புயல்வேகம்
தூரதேசத் தொழில்முனைவோர்
விழிகள்காண் மறுமலர்ச்சி
வேகதாகமாய்ச் செழிக்க
கொழிக்கின்ற வாய்ப்புகளினைக்
கொண்டுதமிழ் நாடுயர்த்தும்
எழில்குலுங்கும் எம்முதல்வ
இன்றும்நூறாண்டு வாழி! நீடூழி!!

**சுற்றிவரும் பகைமைகளைத்**
**தூள்தூளாய் ஆக்கிவரும்**
**பற்றிவரும் தேர்தலிலே**
**நாற்பதுக்கும் நாற்பதுமே**
**உற்றபெரும் பாடுபடும்**
**ஓங்குபுகழ் நம்முதல்வர்**
**வெற்றிவாகை சூடுவரே!**
**வியன்முதல்வர் வாழியரோ!**